## டவர் மண்டப திரையரங்கு மன்றம் - 2013

டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு

கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல. 07**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 135,835,222 கிரயமானதும் தேறிய பெறுமதி ரூபா 16,969,479 தொகையானதுமான ஆதனங்கள், பொறி, உபகரணங்களின் 11 உருப்படிகளில் உள்ளடங்கியிருந்த முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட எனினும் தற்போதும் பயன்பாட்டிலுள்ள, கைதவிர்க்கப்படக்கூடிய சொத்துக்கள் மற்றும் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 258,942 கிரயமான 21 சொத்து உருப்படிகள் கைதவிர்க்கப்படுவதாகக் கருதப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றப்பட வேண்டியதாகக் காணப்பட்ட போதிலும் அவற்றின் கிரயம் நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறி, உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) ஆக்கபூர்வமான ஆயுட் காலம் உயர்வடையும் வகையில் டவர் மண்டப திரையரங்கின் வாயுக் குளிரூட்டல் முறைமையை நவீனமயமாக்குவதற்காக செலவிடப்பட்டிருந்த மூலதனத் தன்மையிலான

ரூபா 1,636,320 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தின் பெறுமானத்தேய்வுக் கொள்கைக்கு இணங்க ஆண்டின் பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் போது கட்டிடங்களுக்கு உரிய பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 408,586 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நடனப் பள்ளி மாணவர்களுக்காக புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 124,600 தொகை உரிய புலமைப்பரிசில் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது முற்பணமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 102 மற்றும் 757 (2) | 2012 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்ட 58 வகையான பொருட்களுக்கு உரித்தான 327 உருப்படிகளின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 702 மற்றும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவு | எல்பின்ஸ்டன் கலையரங்கு நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக உழைப்புப் பங்களிப்பை பெற்றுக்கொண்ட சிவில் பாதுகாப்பு திணைக்களத்துடன் ஓர் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிராததுடன் 20,073 மனித நாட்கள் உழைப்பிற்காக ரூபா 9,032,850 தொகை அத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்விற்காக மெய்மையாய்வுச் சபை ஒன்று நியமிக்கப்படுவது ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 15 அல்லது அதற்கு அண்மித்ததாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு பொருள் மெய்மையாய்வு 2014 யூன் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி | மன்றத்தால் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் ரூபா 103,548,271 தொகையான நிலையான வைப்புகளிலும் ரூபா 25,300,000 தொகையான ஏழுநாள் அழைப்பு வைப்புக்களிலும் பணம் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் படி இதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 8,370,607 பற்றாக்குறையாகியதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,411,238 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பற்றாக்குறையில் ரூபா 3,040,631 தொகையான குறைவு காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது ஒட்டுமொத்த வருமானம் ரூபா 3,813,044 தொகையால் அதிகரித்திருந்தமை மற்றும் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 772,413 தொகையால் மாத்திரம் அதிகரித்தமை முன்னேற்றம் தொடர்பாக முக்கிய காரணமாயிற்று.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது தயாரிக்கப்பட்ட திட்டத்தின் படி, ஆண்டின் இரண்டாவது காலாண்டின் இறுதியில் எல்பின்ஸ்டன் திரையரங்கு மன்றத்தின் நவீனமயப்படுத்தலுக்கு உரித்தான ஆசனங்களைப் பொருத்துதல், டயில்கள் பொருத்துதல் மற்றும் மின் விளக்கு முறைமையைத் தயாரிப்பது தொடர்பாக ரூபா 47,700,000 தொகை மதிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2014 மார்ச் வரை அந் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. அந் நடவடிக்கைகளின் சிக்கல்வாய்ந்த தன்மை மற்றும் நவீனமயமாக்கல் நடவடிக்கைகளுக்காக நிதியைப் பெறுவதிலுள்ள தாமதமும் இதற்குக் காரணமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் மூன்றாம் காலாண்டு இறுதியில் உருக்மணி தேவி அரங்கிலும் டவர் அரங்கிலும் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டு இதற்காக ரூபா 4,115,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2014 மார்ச் 31 வரையிலும் அந் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 5,950,000 தொகையான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த வேறு 06 நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) டவர் ஹோல் மன்றத்தால் பேணப்பட்டு வந்த உருக்மணி தேவி திரையரங்கின் வருமானம் ஊழியர்களின் சம்பளத்தைச் செலுத்துவதற்கேனும் போதியதாக இருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவ்வருமானம் ரூபா 474,050 ஆகக் காணப்பட்ட போதிலும் ஊழியர்களின் சம்பளச் செலவினம் ரூபா 1,469,158 தொகையாகக் காணப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டின் போதும் வருமானம் ரூபா 824,830 தொகையாகவும் ஊழியர் சம்பளச் செலவினம் ரூபா 1,268,412 தொகையாகவும் காணப்பட்டது. திரையரங்கின் பராமரிப்புச் செலவினமேனும் மேற்கொள்ளப்படக் கூடிய வகையில் அவ் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 9 நம்பிக்கைப் பொறுப்புச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. சட்டரீதியான நிலையின் படி, கூட்டத்திற்காகக் கலந்து கொள்ளப்பட வேண்டிய நம்பிக்கைப் பொறுப்பு அங்கத்துவத்தை ஏற்கும் மாகாண மற்றும் உள்ளூராட்சி நடவடிக்கைகள் தொடர்பான விடயப் பொறுப்பு அமைச்சரும் கொழும்பு மாநகர சபை நகர பிதாவும் ஒரு கூட்டத்தொடருக்கேனும் கலந்துகொள்ளாமை தொடர்பாக பொறுப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

அடிப்படைத் திட்டம் இன்றி ரூபா 195,000 செலவில் மஹவ மற்றும் பொல்பித்திகமவில் நடாத்தப்பட்ட நாட்டிய நிகழ்ச்சியை நடாத்தும் நோக்கம் மற்றும் யார் நடாத்துகின்றார்கள் என்பது குறித்தும் தீர்மானித்திருக்கவில்லை. மேலும் இதற்காக டவர் ஹோல் மன்றத்தின் வளவாளர்களோ அல்லது உத்தியோகத்தர்களோ கலந்துகொண்டிராததுடன் அதன் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

உருக்மணி தேவி திரையரங்கு நவீனமயமாக்கல் நடவடிக்கைகளுக்காக திறைசேரியால் 2012 செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 7.5 மில்லியன் தொகை உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஏழு நாள் அழைப்பு வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அத் திரையரங்கின் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் 2013 இன் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக மூலதனச் செலவினத்திற்காக 2011 நவம்பர் 11 ஆம் திகதி திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த ரூபா 20 மில்லியன் தொகை உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படாது அவ்வப்போது ஏழு நாள் அழைப்பு வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**4.5 வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வளங்கள்**

டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் கப் வண்டி ஒன்று கலாச்சார மற்றும் கலை நடவடிக்கை அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதத்தின் போது இது 2634 கி.மீ. தூரம் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 86 ஆன போதிலும் அத்தினத்தில் உள்ளபடியான பதவியணியினர் 61 ஆகக் காணப்பட்டது. வெற்றிடமாக உள்ள பதவியணியில் நிறைவேற்றுப் பதவி நிலையில் 06 பதவிகளும் நிரப்பப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 திசெம்பர் 23 ஆம் திகதி முதல் அப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ள மன்றத்தின் தற்போதைய பணிப்பாளர் நாயகத்திற்கு அப் பதவிக்குரிய எச்எம் - 1- 7 ஆம் சம்பளத் திட்டத்தில் ஆரம்பச் சம்பள மட்டத்திலிருந்து 15 சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டு உயர் சம்பள மட்டத்திற்கு உரித்தான ரூபா 55,030 தொகையான சம்பளத்தில் அமர்த்தப்பட்டு 2007 மார்ச் 01 ஆம் திகதி முதல் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க மற்றும் 2009 மே 06 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் தீர்மானிக்கப்படுவதற்கு முன்னரான சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் தீர்மானிப்பில் அவ்வாறு சம்பளம் வழங்கப்பட்டிருந்ததுடன் சேவைக் காலமும் 1 ஆண்டு காலத்தில் 15 சம்பள ஏற்றங்கள் வழங்கப்படக் காரணமான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நியாயமான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 20 ஆந் திகதியே

சமர்ப்பிக்கப்படடிருந்தன.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2013 ஆம் ஆண்டிற்கான திருத்தஞ்செய்யப்பட்ட பாதீட்டின் படி மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 32 சதவீதத்திற்கும் 580 சதவீதத்திற்கும் இடையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவப் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 ஆண்டறிக்கை முன்வைத்தல்**

டவர் மண்டப திரையரங்கு மன்றத்தால் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் 2014 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளின் நலிவுகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு

(ஆ) கணக்கீடு

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) பதவியணியினர் நிர்வாகம்

(உ) சொத்து முகாமைத்துவம்

(ஊ) ஒப்பந்த நிர்வாகம்